# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.4/2023

### அ.சா.14 (LW 23 )

| பெயர் | Shafudeen | தொழில் | |
|---|---|---|---|
| தகப்பனார் பெயர் | Ajeem | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | 13.06.2024 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1, 2 எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மயக்கவியல் நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2021ஆம் ஆண்டு திண்டுக்கல் நிலக்கோட்டை அரசு மருத்துவமனையில் அரசு உதவி மருத்துவராக பணிபுரிந்த போது 10.03.2021 அன்று காலை 10.55 மணிக்கு கிரேடு ஒன் போலீசார் 2055 என்பவர் மூலமாக சுமார் 39 வயது மதிக்கதக்க ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக வேண்டுகொள் கடிதத்துடன் பெற்றேன். பிரேத பரிசோதனைக்காக கொடுக்கப்பட்ட வேண்டுகொள் கடிதம் **அசா.ஆ.8ஆக** தற்போது குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 11.00 மணியளவில் பிரேத பரிசோதனை செய்ய ஆரம்பித்தேன். மேற்படி பிரேதம் சென்ராயன் என்பரின் பிரேதம் என்று போலீசார் அடையாளம் காட்டினார். நான் பார்த்த போது பிரேதம் மல்லாந்த நிலையில் காணப்பட்டது. நான் பரிசோதனை செய்த போது கீழ் கண்ட வெளிபுற காயங்கள் காணப்பட்டன.

1. அவரது கழுத்தில் Transverse Ligature mark, முன் பக்கமாக தொடர்ச்சியாக இல்லாமல் காணப்பட்டது. 26X2 செ,மீ காணப்பட்டது. அந்த தழும்பு கழுத்தின் முன்பக்கம் தைராய்டு கார்ட்டிலேஜ் எழும்பிற்கு மேலே காணப்பட்டது. பின்னங்க கழுத்தில் 12 செ.மீ அளவுக்கு தழும்பு காணப்படவில்லை. மேற்படி தழும்பு வலது பக்க mastoid–க்கு 6 செ,மீ துாரத்தில் காணப்பட்டது. மேற்படி தழும்பு தாடையின் நடுவில் இருந்து 4செ.மீ

தூரத்தில் காணப்பட்டது.

2. தலையின் பின்புறம் வலது பக்கத்தில் 4x3x2 செ,.மீ அளவான சிதைந்த காயம் காணப்பட்டது.

3. இடது பாதத்தில் 3x2 செ.மீ அளவான சிராய்பு காயங்கள் கடைசி இரு கால் விரல்களில் காணப்பட்டது.

உடலை கூராய்வு செய்து பார்த்த போது கீழ்கண்டவைகள் காணப்பட்டன.

1. கழுத்தை கூராய்வு செய்து பார்த்த போது : Tissue underneath pressure abrasion is dry and pale.
2. No extravasation of blood noted in superficial and deep plane of neck.
3. Thyroid cartilage, cricoid cartilage, tracheal rings intact.
4. Hyoid bone intact
5. Skull intact no fracture seen
6. Meninges intact
7. No clot seen
8. Thorax ribs no fracture, pleura cavity empty
9. Both lungs c/s congested
10. Heart c/s congested, Right chamber contains blood clots, Left chamber empty.
11. Abdomen and pelvis : Stomach contains 150 ml of partial digested food
12. Small intestine contains food.
13. Liver, spleen, Both Kidneys c/s congested
14. Bladder empty, intact
15. Pelvis and spine bone intact

உள்உறுப்புகள் அனைத்தும் பகுப்பாய்விற்காக அனுப்பட்டன. அதன் அறிக்கை RFSL மதுரையிலிருந்து பெறப்பட்டது அதில் விஷம் எதுவும் காணப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

மேற்படி நபர் அவருக்கு ஏற்பட்ட தலை காயத்தின் காரணமாக ஏற்பட்ட இரத்த இழப்பு மற்றும் அதிர்ச்சியினாலும், மேற்படி நபரின் மூச்சுப்பாதை நெருக்கப்பட்டதாலும் இறந்திருக்க வாய்புண்டு என்று நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.9** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 கத்தினால் தாக்கப்படும் போது மேற்கண்ட சிதைந்த காயம் ஏற்பட வாய்ப்புண்டு. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

பொதுவாக போலீசார் பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகொள் கடிதம் கொடுக்கும் போது வழக்கு பற்றிய விபரங்களை கொடுப்பார்கள் என்றால் சரிதான். பிரேத பரிசோதனை முடிந்த பின்னர் forensic lab இல் இருந்து அறிக்கை வந்த பின்னர் தான் நான் இறுதி அறிக்கை கொடு'த்தேன். ஒரு நபர் சிமெண்ட் தரையில் உயரத்தில் இருந்து கீழே விழும் போது பின்னந்தலையில் மோதி சிதைந்த காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் பொதுவாக உள்ளது. ஒரு நபர் துாக்கில் தொங்கும் போது அறுந்து கீழே விழும் போது காலில் சிராய்யு காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். கபாலத்திற்கு வெளியில் இரத்த நாளங்கள் உள்ளன அவை சேதம் அடைந்தால் இரத்த கசிவு ஏற்படும். அது போன்று காயம் ஏற்பட்டால் மூக்கில் இருந்து இரத்தம் வர வாய்ப்புண்டு என்றால் சரிதான். பொதுவாக ஒருவருக்கு இரத்த போக்கு ஏற்பட்டால் வலிப்பு வர வாய்ப்புண்டு என்றால் மூளையின் உள்ளே இரத்தக்கசிவு ஏற்பட்டு இரத்தக்கட்டு ஏற்பட்டால் வலிப்பு வர வாய்ப்புண்டு. இரத்தம் வடிந்து உயிருக்கு போராடும் போது ஒரு நபர் அவர் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக குப்புற படுக்க வாய்ப்புண்டு என்றால் சரிதான். பிண விறைப்பு தன்மை இறந்த 4 மணி நேரத்திற்கு பிறகு ஏற்படும் என்றால் சரிதான். காலில் இருந்து ஆரம்பித்து தலை வரை பிணவிறைப்பு ஏற்பட 12 மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். பிணவிறைப்பு தன்மை 12 மணி நேரம் இருந்து பின்பு படிப்படியாக தலையில் இருந்து கால் வரை குறைவதற்கு மேலும் 12 மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். மொத்தம் 28 மணி நேரத்திற்கு பிணவிறைப்பு தன்மை இருக்கும் என்றால் சரிதான். ஒரு நபரின் மூச்சுப்பாதை துாக்குப்ப போட்டுக்கொள்வதால் நெருக்கப்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். நான் சொல்வது போல் சா.பொ.1 கத்தியால் தாக்கினால் சிதைந்த காயம் ஏற்படாது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதால் ஏற்படும் என்றும் தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**2ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.14 09:20:30 +0530

Additional District Judge,

Dindigul.